அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில்

# கிருஷ்ணகிரியில் திட்டப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம்!

## தே. மதியழகன் எம்,எல்,ஏ. – ஒய்.பிரகாஷ் எம்,எல்,ஏ. பங்கேற்பு!

கிருஷ்ணகிரி. நவ.3-

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட ரங்கில், மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசின் முன்னோடி திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ், கம்யூனிஸ்ட் தளி சட்டமன்ற உறுப்பினர் ராமசந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வருவாய் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, கூட்டுறவுத் துறை, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, பள்ளிக்கல்வித்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, நீர்வளத் துறை, வேளாண் மற்றும் உழவர் நலத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை உள்ளிட்ட அனைத்து துறைகள் சார்பாக பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளின் முன்னேற்றம் குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி பொற்கால ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வருகை தந்து பல்வேறு முடிவுற்ற திட்ட பணிகளை துவக்கி வைத்தும், புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி தமிழகத்திலேயே கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான பட்டாக்கள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். பொதுமக்களுக்கு பல ஆண்டுகளாக பட்டா வழங்காமல் இருந்த நிலையில் பயனாளிகள் பட்டா பெற்று பயனடைந்துள்ளார்கள்.

தற்போது வடக்கிழக்கு பருவமழை துவங்கியுள்ள நிலையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நல்ல மழை பெய்துள்ளது. கடந்த ஆண்டு பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்டபோது அரசு துறை அலுவலர்கள் சிறப்பான முறையில் பணியாற்றி பொதுமக்களுக்கு தேவை யான அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தனர். அதேப்போல கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில் “உங்களுடன் ஸ்டா லின்” சிறப்பு முகாம் 228 முகாம்கள் நடைபெற்றுள்ளது. இம்முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு 45 நாட்களுக்குள் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு முதலமைச் சர் அவர்கள் அறிவுறுத்தி உள்ளார்கள். எனது துறை சார்ந்த அலுவலர்கள் தங்கள் துறைக்கு வரப்பெற்றுள்ள தகுதியான மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு பயன்கள் கிடைக்க மாவட்ட நிர்வாகம் உறுதியாக உள்ளது. கலைஞர் உரிமை தொகை கிடைக்க பெறாதவர்களுக்கு இம்முகாமில் மனுக்கள் பெறப்பட்டுள்ளது. தகுதிவாய்ந்த மகளிர்க்கு டிசம்பர் மாதம் வழங்கப்படும்.

மேலும் மாநிலம் முழுவதும் 2 இலட்சம் கலைஞர் கனவு இல்லம் கட்ட நடவடிக்கை மேற்கொண்டு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த வாரம் தென்காசி மாவட்டத்தில் 1 வது இலட்சத்து 1 வீட்டை திறந்து வைத்து பயனாளிக்கு வழங்கினார்கள். அதேப்போல் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பழுதுபார்ப்பு பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் சாலை பணிகளுக்கு அரசுக்கு கருத்துரு அனுப்பபட்டு விரைவில் அப்பணிகள் மேற்கொள்ளப்படும். தாயுமானவர் திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்தோறுக்கு மாதம் முதல் வாரத்திலேயே அவர்களின் வீடுகளுக்கு உணவு பொருட்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே துறை சார்ந்த அலுவலர்கள் விட்டுப்போன பணிகள் மற்றும் வளர்ச்சி திட்ட பணிகளை கண்ணும் கருத்துமான மேற்கொள்ள வேண்டும் என அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.



மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், வழுவூரில் நடைபெற்ற மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்ட மருத்துவ முகாமில் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் எஸ்.ஸ்ரீகாந்த் ஆகியோர் வழங்கினார். உடன் குத்தாலம் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் மங்கை எம்.சங்கர், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு தலைவர்உமாமகேஷ்வரிசங்கர் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.




